# சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

| | | |
|---|---|---|
| VOL. VI. | MADRAS, MAY 1911. | NO. 10, |
| தொகுதி ௬. | சென்னை, மேமீ 1911. | பகுதி ௰, |

## ஆகாரம்.

ஆகாரம் எல்லாப் பிராணிகளுக்கும் ஜீவனைக் காப்பாற்றக் கூடியது. ஆகாரமில்லையாயின் ஜீவிக்க முடியாது. பிராணாதாரமான ஆகாரத்தைத் தேட பிரயாசைப் படுவதே பிராணிகளுக்குத் தொழிலாக விருக்கிறது. ஒவ்வொருவனும் ஆகாரத்திற்குப் போதுமானபடி சம்பாதித்த பின்புதான் மற்றவைகளுக்குழைக்கக் கூடும். சரியான ஆகாரமில்லையாயின் உழைத்தல் கஷ்டசாத்தியமான காரியம்.

இந்த ஆகாரமானது பிராணிகளுள் விலங்கினங்களுக்கு வேறு, பறவைகளுக்கு வேறு, மனிதர்களுக்கு வேறு என வெவ்வேறு விதமாக விருப்பது யாவருமறிந்த விஷயம். இங்கு நாம் கவனிக்க வேண்டியது மனிதர்களைப்பற்றியேயாம்; மனிதர்களுள் சிலர் மாம்சம் உண்கிறார்கள். சிலர் மரக்கறி உண்கிறார்கள் இதுவன்றிச் சிலர் சில தேசங்களில் கோதும்பையை முக்கிய ஆகாரமாக உபயோகிக்கிறார்கள். சிலர் சிலதேசங்களில் அரிசியை முக்கிய ஆகாரமாக உபயோகிக்கிறார்கள். இப்படி யுண்பது தேசத்தின் சீதோஷ்ணத்திற் கேற்ப ஏற்பட்டிருக்கிறதே யொழிய வேறில்லை. சிலர் வழக்கத்திலும் உபயோகிக்கிறார்கள். ஒன்றையுபயோகித்தவர்கள் மற்றொன்றைப் புதிதாய் உபயோகிக்கின் தேகத்திற்குக் கெடுதலுண்டாவது யாவரும் அறிந்த விஷயம். அது

போலவே இரண்டுவேளை புசித்தவர்கள் மூன்றுவேளை புசிப்பினும் அல்லது ஒருவேளையாகக் குறைப்பினும் தீங்குண்டாகிறது. இதுவன்றி வேளை தப்பாமலும் ஏற்றத் தாழ்வில்லாமலும் புசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒருவேளை ஆகாரம் அதிகமாய்ப் போனால் படாதபாடு படவேண்டியதாயிருக்கிறது. ஆகவே காலந் தவறாமலும் ஏற்றத் தாழ்வில்லாமலும் தத்தம்ஜீரணசக்திக்குத் தக்கபடியாகவும் நாம் ஆகாரத்தையுட்கொள்ளவேண்டுமென்பதை நாமறிவோம். இவைகளேயன்றி நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது உழைப்புக்குத் தக்கபடி ஆகாரமுமிருக்க வேண்டுமென்பதேயாம். சரியான உழைப்பில்லாதவர்களுக்கு ஜீரண சக்தி மிகக் குறைவாயிருக்கும். அப்பொழுது அவர்கள் அதிக ஆகாரம் புசிப்பார்களாயின் ஜீரணமாகாமல் வருந்துவார்கள்.

பாருங்கள் ஆகாரம்பிராணிகளுக்கு இன்றியமையாதது. உழைத்தாலன்றித் தங்களுக்கு வேண்டிய ஆகாராதிசுகங்கள் கிட்டா. ஆகவே ஆகார மில்லாவிட்டால் உழைப்பில்லை. உழைப்பில்லையாயின் ஆகாரமில்லை என்றாகிறது. இது கடவுளினுடைய அற்புதமான செய்கை.

இப்படியிருக்க, சிலர் தங்கள் தேகத்திற்குச் சரியான உழைப்பைக் கொடாமலே ஆகாரத்தை மட்டும் வழக்கத்திற்கு மேலு உட்கொண்டு ஜீரணக் குறைவால் உபத்திரவப் பட்டு வியாதிக்குள்ளாகிறார்கள். சிலர் சரியான ஆகார வசதியை ஏற்படுத்திக் கொள்ளாமல் உழைத்துத் தேக அசௌக்கியத்திற்குள்ளாகிறார்கள். இது நேரிடுவது பெரும்பாலும் இல்லாமையேயாம்.

இதுவரையில் நாம் ஆகாரத்தைக் குறித்து பேசி வந்தது யாது பற்றியெனில் கூறுவாம்.

நமது தேசத்து சீதோஷ்ணத்திற்குத் தக்கவாறு இரண்டு வேளை யுண்பதே விதிக்கப்பட்டது. இது சரீராரோக்கியத்திற்கேற்றது. வைத்திய சாஸ்திரங்களும் தர்ம சாஸ்திரங்களும் ஒத்துக்

கொண்டது. மத்தியானம் 12-மணிக்குமேல் பகற்போஜனமும் இரவு 8-மணிக்குள் இராப்போஜனமும் கொள்ளல் தகுதியாம். இது நிற்க, நாம் மேலே ஒன்று சொல்ல மறந்தோம். அதாவது உழைப்பில் மன உழைப்புச் சிலர்க்கு ஏற்படுகிறது. சிலர்க்குச் சரீரப் பிராயாசம் ஏற்படுகிறது. மனோமுயற்சியுள்ளவர்கள் உத்தியோகஸ்தர்களாவார்கள். சரீரப் பிரயாசப்படுவோர் வேலைக்காரர்கள், வயல்வெளி, மலைப்புறம் சுரங்கம் இவைகளில் வேலை செய்பவர்களாவர்கள். இவ்விரு உழைப்பாளருள் மனோ முயற்சியுடையவரினும் தேக உழைப்புள்ளவர்கள் மூன்றுவேளை புசிப்பதுங்கூடும். மனோமுயற்சியுள்ளவர்கள் இருவேளை புசிப்பதே உசிதம். சிறுவர்கள் அதாவது பதினாறு வயதிற் குட்பட்டவர்கள் நான்கு வேளை புசித்தாலும் கெடுதி செய்யாது. அதை விட்டு இப்பொழுது நம் தேசத்தில் சிறுவர் முதல் பெரியோர் உள்பட யாவரும் ஆகாரமென்பதை நியமமில்லாமலே உட்கொள்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் அன்னிய நாட்டார் வழக்கமாகிய காபியும் டீயுமாம். அநேகமாய் எல்லார் வீட்டிலும் காலையிலெழுந்ததும் காப்பியும் உப்புமாவும் ஒரு முறை வயிறு நிரம்பப் புசிக்கிறார்கள். பிறகு பத்துமணிக்குள் போஜனம் செய்கிறார்கள். பிறகுபகல்இரண்டுமணிக்கு டீயும்உப்புமாவுமோ அல்லது காபியும் உப்புமாவுமோ உபயோகிக்கிறார்கள். இதன் பின் ஆபீஸிலிருந்து வந்ததும் ஏதோ சிற்றுண்டி உண்கிறார்கள். இப்படி யுண்பதால் இவர்கள் அடையத்தக்க பலன் தேக அசௌக்கியமாயிருக்கிறதே யொழிய சௌக்கியம் கிடையாது. இவர்கள் முதற் சாப்பிட்ட உணவு ஜீரணமாகப் போதுமான காலமிருந்தாலல்லவா சௌக்கியந்தரும். இதனைத் தற்காலம் ஆங்கிலக் கல்வியபின்று சுகாதார சாஸ்திரம் படித்தவர்களும் செய்கிறார்கள். இவ்வழக்கம் வரவர விர்த்தியாய்க்கொண்டே வருகிறதே யொழிய குறைந்தபாடில்லை. நம் சென்னை பட்டணத்திலிருக்கும் காபிஹோட்டலுக்கு அளவுசங்கை கிடையாது. இந்தக் காப்பிஹோட்டல்களுக்கேற்றவாறே ஹாஸ்பிடல்களும்

மெடிகல் பிராக்டீஷனர் எனப் போர்டு போட்டுக்கொள்ளும் வைத்தியர்களுமிருந்து வருகிறார்கள்.

இந்தக் காப்பியும் டீயும் மனிதனுக்கு ஓர் விதப் போதை கொடுக்கத் தக்கது. போதையுள்ள வஸ்துக்கள் பித்தத்தையே உண்டாக்குமென்பது வைத்திய சாஸ்திரம். ஐரோப்பிர்கள் செய்கிறார்களே யெனில் தேச சீதோஷ்ணமே அதற்குக் காரணமென்று மேலேயே கூறியிருக்கிறோம். காபி டி முதலிய போதை வஸ்துக்கள், உட்கருவிகளைச் சிறிதுநேரம் முறுக்கேரச்செய்யும். அதன் சக்திகுன்றக்குன்ற முறுக்கும் குறையும். உட்கருவிகளும் நரம்புகளும் தளர்வடையின் காபி டீ அருந்துவோருக்கு வியாதியுண்டாகுமென்பதிலையமில்லை. இதுவன்றி காபி டீ குடிப்பவர்களுக்குத் தொண்டை வரட்சி, நாவரட்சி முதலிய உண்டாகும், இதைச் சிறுவர்களும் உணர்வதில்லை, பெரியோர்களு முணர்வதில்லை. இது இப்படியிருக்க, ஆகாரம் சுத்தமாயும் நன்றாய்ப் பக்குவமானதாயு மிருக்கவேண்டு மென்பதையும் கவனிப்ப தவசியமென்பதைச் சிலர் கவனிக்கிறதில்லை. அதையும் கவனித்தல் அவசியம். ஆதலால் ஆகாராதி சௌகரியங்களில் நமது முன்னோர்கள் தாம் கண்டறிந்தபடி நியமித்தபடியே உட்கொள்ளுதல் மிகப் பயன் தருமென்பதை யுணர்ந்து, மேனாட்டாருடைய கொள்கையாகிய காபிடீ முதலியவைகளை யடிக்கடி உபயோகித்து தேக சௌக்கியத்திற்குக் குறை தேடிக்கொள்ளாதிருக்கப் பிரார்த்திக்கின்றனம்.

# விவேகாநந்த சுவாமிகள் சரித்திரம்.

(தொடர்ச்சி)

சிகாகோ சபை கலைந்தபிறகு இவர் அமெரிக்காவிலேயே பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு நமது மதத்தின் பெரு

மையையும், பழமையையும், நமது மதத்துக்கும் பிற மதத்துக்கு முள்ள வித்தியாசங்களையும் நன்கெடுத்துரைத்து, நமது மதம் போன்ற விசாலமானதும் உயர்ந்ததுமான மதம் வேறெதுவுங் கிடையாதென்று பிரசங்கித்திருக்கிறார். "பல கொள்ளைக்காரர்கள் வந்து ஊரெல்லாம் கொள்ளையடித்துப், பலஜாதியார்வந்து பல வருஷங்கள் ஆண்டிருந்தும், ஔரங்சிப் முதலான பல மதபபித்தர்கள் கையில் அகப்பட்டிருந்தும், பஞ்சம் கொள்ளைநோய் முதலியவைகளால் அடிக்கடி அலைப்பட்டிருந்தும், இம்மதம் நெடு நாட்களாகப் பலத்திற் குறைவின்றி இருந்து வந்திருக்கிறது. செல்வம், சேனுபலம் முதலியவை நிரம்ப இருப்பினும், இம்மதத்தைப் போன்றவலிமை மகம்மதுமதத்திற்குக்கிடையாது. ஐரோப்பாதேசத்திலிருந்து ஆயிரக்கணக்காய் பாதிரிகள் வந்து கிறிஸ்தவமதத்தைப் போதித்து, கிறிஸ்தவமதத்தைச் சேருவதனுல் துரைத்தனத்தார் வழியாகப்பலவித இலாபங்களைக்காட்டித் தினந்தினம் உழைத்து வரும்பொழுதே, நமது மதம் சிறிதும் அசைவதில்லை யென்றுல் இம்மதத்தின் உயர்வைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நமது மதத்திற்குப் பலம் எது? பிற மதங்களைப் பற்றி இழிவாய்ப் பேசாமலிருப்பதுதான். ஏனைய மதத்தோரெல்லோரும் தம் மதந்தானுயர்ந்தது தம் மதத்தைச் சார்ந்தாருக்குத்தான் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லித் திரிகிறார்கள். நமது மதமோ எங்கும் பகவானிருக்கிறார். எல்லாம் கடவுளால் உண்டானது. ஆகையால் ஒன்றைப்பழித்து, ஒன்றை உயர்த்துவது பகவானுக்குச் சம்மதியாகாது என்று சொல்லுகிறது. அதுதான் இந்து மதத்திற்கு மூலபலம்." இவ்விதம் பலதடவை சொல்லி நமது மதத்தையும் நமது தேசத்தாரையும் பற்றிக் கூறிக் கௌரவப்படுத்தி வந்த மஹான் நமது நாட்டிற்கு 1897ஸு திரும்பிவரும்போது அவரை நமது தேசத்தார் நிரம்பக் கௌரவித்தார்கள். ஒவ்வொருவூராரும் அவரை மிக்க அன்புடனழைத்தேற்றுத் தம்மைத்தாமே பெருமைப்படுத்திக்கொண்டனர்.

இவர் 1897வருஷ ஜனவரிமாதத்தில் முதலில் கொழும்புவில் வந்திறங்கி அது முதல் கல்கத்தா வரையிலும் பல இடங்களில் பல விஷயங்களைப்பற்றிப் பிரசங்கஞ்செய்துகொண்டுபோனார். சென்னையில் நான்கு பிரசங்கங்கள்செய்தார். பின்னர்க் கொஞ்சநாட்களுக்கு ஹிமயமலையில் ஓர் ஆச்சிரமம் கட்டிக்கொண்டு அங்கிருந்தார். அப்பொழுதே குமாயோன் என்னுமிடத்தில் சந்நியாசிகளுக்காகவே ஓர் ஆச்சிரமங் கட்டுவித்து, அதற்கும் தாமே தலைவராயிருந்தார். ஒருவருஷத்திற்கெல்லாம் அமெரிக்காவுக்குத் திரும்பிப்போய் அங்கே வோதந்தசபை யொன்று ஏற்படுத்தித் தம்முடன் கூடப் பரமஹம்சருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த பலரை ஆங்கு வரவழைத்து இந்து மதத்தைப்பற்றியும், வேதாந்தத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். அவ்வேதாந்த சபையில் அமெரிக்கர்களுக்குள் நிரம்பக் கற்றவர்கள் என்று பெயர் பெற்றவா அங்கத்தினர். இவர் தாழ்ந்த ஜனங்களுக்குப் போதிக்கப் போகவேயில்லை. எவ்விடத்திலும் உயரிய அறிவுடையார்க்கே போதிக்கச் சென்றனர். அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து ஜர்மனி முதலிய இடங்களுக்குச் சென்று, அங்கே மாக்ஸ் முலர், டாஸன் முதலிய பெரியோர்களைக்கண்டு, அவர்களை இவருடைய புத்தியை மெச்சிக்கொள்ளும்படிப் பல பிரசங்கங்கள் செய்தார்.

1900வருஷத்தில பாரிஸ் நகரத்தில் ஒருபெரும் காட்சி நடந்தது. இவர் பாரிசுக்குச் சென்று பிரஞ்சு பாஷையிலேயே யாவரும் வியக்கும்படி நமது மதத்தைப்பற்றிப் பிரசங்கித்தனர். பாரிசிலிருந்து ரோம் தேசத்துக்கு இவர் அழைக்கப்பட்டார். கிறிஸ்தவ அதிபதியாகிய போப் வசிக்கும் ரோமுக்குச் சென்று அங்கேயும் நமது மதத்தினுண்மையை வெளிப்படுத்தினர். சுவாமிகளுக்குச் சிறிது தேக அசௌக்கியமாகிவிடவே இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். பின்னர் தேகசுவக்கியமுற்றனர். இவரை ஜப்பான் தேசத்தாரனேகர்கள் தம தேசத்துக்கு வரவேண்டுமென்று

அழைத்தனர். இவரும் அங்கு போவதாகவே எண்ணங்கொண்டிருந்தார். ஜூலைமாதம் நாலாந்தேதி சாயங்காலம் வெளியே போய்விட்டு வரவே தன்னுடனிருந்தவர்களை அழைத்துத் தாம் இனி உயிருடனிருப்பது அசாத்தியமென்று சொல்லி, இரண்டு மூன்று நாழிகைகளுக்கெல்லாம் சமாதியடைந்தார்.

இவருக்கு வெகு பெயர்கள் சிஷ்யர்கள். ஆங்கிலேய அமெரிக்கர்களுள்ளும் அநேகம் பெயர் சிஷ்யர்களிருக்கிறார்கள். இவரது சிஷ்யையாகிய நிவிதத்தா அம்மையும், அபயாநந்தா அம்மையும் நிரம்பக் கற்றவர்கள். அபயாநந்தா அம்மையும் சென்னைக்கு வந்து, தான் விவேகாநந்த சுவாமிகளிடத்தில் வைத்துள்ள அன்பைத் தனது பிரசங்க வாயிலாய்ப் பூர்த்தியாய்க் காண்பித்திருக்கிறார்கள். அபேதாநந்த சுவாமிகள் அமெரிக்காவில பற்பல விடங்களுக்குச் சென்று, நமது மதத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்து ஒவ்வொரு தடவையும் தவறாமல் விவேகாநந்தருடைய மகிமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவர் அமெரிககாவில் ஏற்படுத்தியிருக்கும் வேதாந்தசங்கம் நாளுக்குநாள் பலப்பட்டுக்கொண்டு வருகிறது. நிவிதத்தா அம்மை ஏற்படுத்தின பெண்பாடசாலையும் வலுத்துக்கொண்டு வருகிறது. இவர் தமது தேசத்தார்க்குச் செய்துள்ள நன்மைகள் ஒருநாளும் மறக்கத்தக்கதல்ல.

இவர் பிரசங்கங்களும், இவரெழுதிய புத்தகங்களும் அநேகம். கர்ம யோகத்தைப்பற்றியும், ஞான யோகத்தைப்பற்றியும், பக்தி யோகத்தைப்பற்றியும் அநேகம பிரசங்கங்கள் செய்திருக்கின்றார் உலகத்துக்கே ஒரேமதம் இருப்பது கூடுமா என்பதைப்பற்றி ஒரு புத்தகம் வரைந்துளார். பதஞ்சலி சூத்திரத்தை அவசியமான குறிப்புக்களுடன் இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கிறார். தனது குருவைப்பற்றி ஒரு நூல் செய்திருக்கிறார். இவர்தாம் மாக்ஸ்முல்லரைத் தூண்டித் தமது குருவைப்பற்றி எழுதச்சொல்லியது. ஒவ்வொரு சமயமும், வேதாந்தமே, சர்வ

லோக சம்மதமான மதமென்பதை வற்புறுத்திக் கூறியிருக்கிறார். மாக்ஸ்முல்லர் தமது புத்தக முகவுரையில் "இப்பரம ஹம்ஸரிருக்கும் நாடா நமது கிறிஸ்தவப் பாதிரிகளால் மாற்றப்படப் போகிறது?" என்று சொல்லி வியக்கும்படி செய்தவர் இவரே. இத்துணை உபகாரஞ் செய்த மஹானை நமது நாட்டார் மறவாமல், அவருடைய ஞாபகம் நம்மனோர் உள்ளத்தினின்றும் நீங்காமலிருக்க வேண்டும். அது நமது நாட்டிற்கோர் பெருநன்மையை விளைக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

அபிநவப் பத்திரிகை

# சீதாமதி.

ஓர் நாவல்

வசந்த காலத்தில் ஒருநாள் கோபாலன், நரசிம்மனென்று இரண்டு சிநேகிதர்கள் கடற்கரையை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது சாயந்திரம் சூரியாஸ்தமனத்திற்கு அரைமணி நேரமிருக்கும். கடற்காற்றுக் குளிர்ந்து மெத்தென்று வீசிற்று. பொன்வர்ணமான சூரிய கிரணங்கள் பரந்து கண்ணுக்கினிமையாயிருந்தது. கடலில் அநேகம் படகுகளோடிக்கொண்டிருந்தன. நீராவிக் கப்பல்கள் இரண்டு ஒன்று போய்க்கொண்டிருந்தன. பல்பல ஜாதி ஜனங்களும் உலாவித்திரிந்து கொண்டிருந்தார்கள். அப்போது கோபாலனும் நரசிம்மனுங் கூடிக் கடற்கரையின் சமீபத்தில் வந்து வருணபகவானுக்கு வெண்சவரி யிரட்டுவதுபோலப் புரண்டு விழும் அலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். கோபாலன், "நரசிம்மா! அதோ பெருங் கூட்டம் வருகிறதே அது

என்னவென்று பார்த்துவிட்டுப் போவோம் சற்று நில். நரசிம்மன், கோபாலா! பட்டணத்தில் கூட்டத்துக்கென்ன குறைச்சல்; எத்தைக் கண்டாலுந்தான் கூட்டங் கூடுகிறார்கள். ஆதலால் அதிலென்ன விசேஷம்; நாம் போவோம் வாவென்றான். கோபாலா! எதைக் கண்டாலுங் கூட்டங்கூடுகிறது எங்குந்தான் வழக்கமாயிருக்கிறது. இந்தப் பட்டணத்தில் மாத்திரந்தானா இருக்கிறது? விஷயமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைச் சற்றுக் கண்ணால் பார்த்துவிட்டுப் போவதே ஜனங்களின் சுபாவம்; பொதுஜன சுபாவத்தைக் கவனியாமல் பட்டணத்திலுள்ளவர்கள் மேல் மாத்திரமேக்குறை கூறுவது முறையாகாது என்று கோபாலன் சொன்னான். நரசிம்மன், கோபாலா! நீ சொல்வது நியாயமேயானாலும், நமது சீமையிலுள்ள ஜனங்கள் பட்டணத்தாரைப்போல அவ்வளவு கேவலஸ்திதியிலிருக்கவில்லை; ஏழை பெளியவர்கள், பணக்காரர்கள், படித்தவர்கள், படியாதவர்கள் எல்லாரும் ஒருங்கே கூடுகிறார்கள் இப்படி நீ பெங்காவது கண்டிருப்பாயா! அப்படியில்லாதபடியால்தான் பட்டணத்தில் கூடுகிற கூட்டத்தினால் விசேஷமில்லையென்றேன். நீயும் பட்டணத்திலேயே பழகியிருப்பவனாதலால் உனக்குக் கோபம் வருகிறது. அது கிடக்கட்டும். பார்த்துவிட்டுத்தான் போவோம்; சற்று நில்லென்று பேசிக்கொண்டிருக்கையில்; பக்கங்களில் மெய்காவலர்கள் சூழ நாலு குதிரை பூட்டிய இரதத்தில் நமது கனம் கவர்னரவர்கள் கெண்டியிலிருந்து தமது மாளிகை நோக்கி வந்தார்கள். அவர் வருகிறதைத்தான் பல ஜனங்களுங் கூடி வேடிக்கை பார்த்துக்கொண்டு, அவரது இரதத்தைத் தொடர்ந்து வந்தார்கள். கோபாலன் நரசிம்மனை நோக்கிப் பார்த்தாயா; கவர்னரைப் பார்க்கக் கிடைத்ததே! அதுவே பெரிதல்லவா? எப்படியானாலும் நமது சீமையை யாளும் இராஜப்பிரதிநிதியை நாம் பார்க்கவேண்டாமா? நரசிம்மன் ஆம் பார்க்கவேண்டியது அவசியந்தான். இருக்கட்டும்; நாம் கடற்கரை

போய்ச் சற்று உலாவுவோம் வா! என்று போய் உலாவிக் கொண்டு வருகையில் அவர்களுடைய சிநேகன் சீதாமதி தற்செயலாய் எதிர்ப்பட்டான். நரசிம்மன், "கோபாலா அதோ வருகிறவன் நமது வரதராஜனு? கோபாலன், ஆம் ஆம்; நாமெதிர் கொண்டுபோவோம் வா, என்று சொல்லிச் சற்றுதூரம் போகவும் சீதாமதிஅவர்கள் கிட்டவந்து, குனிந்துத் தலை நிமிர்ந்து பார்த்து, " குட் ஈவனிங் டீயர் பிரெண்டஸ்" (Good-evening dear friends) என்றான். அவர்கள் இருவரும் அவன் கையைப் பிடித்துக்கொண்டு ஷேக்ஹாண்ட் (shakehand) கொடுத்து மறுவந்தனஞ்செய்து மூவரும் சேர்ந்து ஒரு இடத்தில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் க்ஷேம சமாசாரம் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். இந்தமூவரும் கிறிஸ்டியன் காலேஜில் பி. ஏ. வகுப்பில் படித்தவர்கள். கோபாலன், நரசிம்மன் என்பவர்கள் கும்பகோணம் சைவ வேளாள மரபில் பிறந்தவர்கள். மதாசாரக்கொள்கை தவறாதவர்கள் வேதவைதிக அபிமானமுள்ளவர்கள். பரோபகார சிந்தையுள்ளவர்கள் பரதேசத்துக் கல்விகற்றுத் தேர்ந்ததுபோலவே நமது சுதேசச் சாஸ்திரங்களிலும், தமிழ்ப் பாஷையிலும சிறந்தவர்கள். இலக்கண விலக்கியங்களில் நன்றாய்ப் பயின்றவர்கள். ஆஸ்திக புத்தியுடையவர்கள். சீதாமதியோ கும்பகோணம் சோலையப்ப முதலித் தெருவில் சிறந்த வைதிகபிராமண குலத்தில்பிறந்தவனானாலும் அவ்விருவருக்கும் முற்றுமானை குணமுடையவன். இவனுடைய தகப்பனார் சதுர்சாஸ்திர பண்டிதர். யாகயக்ஞங்கள் செய்து ஸ்ரீகண்டதீட்சதரென்று சிறப்புத் திருநாமம் பெற்றவர். பரமசாதுவென்று புகழப்பட்டவர். ஆனால் கல்விமான்களுக்கியல்பான தரித்திரத்தோஷமை கொண்டவர். அதனால் சீதாமதியை இங்கிலீஷ்பாஷை படிக்கவைத்தார். அவன் கும்பகோணம் காலேஜில் மெட்ரிகிலேஷன் பரிக்ஷைவரைப் படித்துத் தேறினான். அதற்குமேல் படிக்கச் சக்தியில்லாமையால் கும்பகோணத்தை விட்டுச் சென்னைக்குவந்து சேர்ந்தான். அங்

கே சிலருடைய உதவிபெற்றுக் கிரிஸ்டியன் காலேஜில் படித்தான். கோபாலனும நரசிம்மனும் அதே காலேஜில் படித்தபடியால் அம் மூவரும் மனமொத்த சிநேகராய்க் கூடியிருந்தார்கள். சிதாமதிக்கு நமது மதக் கொள்கையாவது சாஸ்திரங்களாவது, கல்வியாவது மனதுக் கிசையவில்லை. அந்நிய நாட்டார் கல்வியே அவனுக்குச் சிறந்தது. அவர்களுடைய சாஸ்திரங்களே மனதுக்கு ருசிகொடுப்பது அந்நியநாட்டாரே அவனுக்குக் குரு. அவர்களுடைய வாக்கியமே பிரமாணம். அதுவும் போதாமெதன்று சீர்திருத்தக் காரரென்னும் ஒரு அவலக் கூட்டத்தாருடன் கூடி முழுதுங் கெட்டுப்போனுன்.

(வரும்.)

A. S. பாரதி,

## FEMALE EDUCATION

## பெண் கல்வி.

நமது தேசத்தில் ஆண்பிள்ளைகளின் கல்வி விசாலித்து வருகிறதேயன்றி பெண்பிள்ளைகளின் கல்வி பொதுவாய்ப் பரவி தாழ்ந்த நிலைமையிலேயே இருந்து வருகிறது. இப்படி இருப்பதைப் பற்றி அநேகம் புத்திமான்கள் துக்கப்பட்டபோதிலும் பெரும்பான்மையான ஜனங்கள் இருப்பதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாதவர்களாயிருக்கிறுர்கள்.

நம்முடைய மனம் எப்படிப் பட்டதென்றால், ஒரு கணப் பொழுதாயினும் சும்மா யிராமலும், பூமண்டலம், ஆகாசமண்டலம் முழுதும் சஞ்சரித்துக் கொண்டிருதாலும், வேலைகள்

செய்தாலும், படுத்திருந்தாலும், நித்திரைசெய்தாலும், உண்டாலும் தன்னுடைய சஞ்சாரத்துக்கு எப்போதும் ஓய்வில்லை, தனக்கு களைப்புமில்லை, இளைப்புமில்லை; என்று மித்தன்மையானது; இப்படிப்பட்ட மனதுக்குக் கல்வி, என்கிற துணைவனில்லாவிட்டால், கடிவாளமில்லாத குதிரை, போலவும் அது தேசமெல்லாந்திரிந்து நம்மை துர்குணமாகிற காட்டிலும், மேட்டிலும், கல்லிலும் முள்ளிலும் இழுத்து முடிவில் நரகமென்கிற பாதளத்தில்த்தள்ளிவிடும், என்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை; இக்காரணத்தைப் பற்றியே ஆண் பிள்ளைகள் உத்தியோகஞ்செய்ய விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அவர்களுககுப் படிப்பிப்பது வழக்கமாயிருக்கிறது.

பெண்களுடைய மனமும், புருஷர்களுடைய சித்தமும் ஒரே தன்மையாயிருப்பதால் பெண்களுக்கு மட்டும் கல்வியைப் போதியாவிட்டால் அவர்களுடைய சித்தம் யெப்படி நன்மார்க்கத்தில் நிலைகொள்ளும்? காசுக்கொரு குதிரையும் வேண்டும், காற்றைப்போல் பறக்கவேண்டும்" யென்பது போலவும் ஸ்திரீகள் படியாதவர்களாயிருக்கவும் வேண்டும் உத்தமிகளாய் நடக்கவும் வேண்டுமென்றால் யெப்படி நம்முடைய மனோரதம் நிறைவேறும்?

இந்த தேசத்துப் பெண்கள், கல்வி யில்லாமல் அஞ்ஞானக் கடலில் ஆழந்திருக்கிறார்கள் யென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமாயிருக்கிறது. பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதைச் சிலர் ஒப்புக்கொண்டபோதிலும் அனேகர்கள் பெண்கள் படித்து என்ன உத்தியோகம் செய்யப் போகிறார்களாவென்று, துஷேபம் செய்கிறார்கள்; தெய்வ பக்தியும், விவேகமும், நற்குணங்களுமுண்டாவதற்காகக் கல்வி கற்பதுவேயல்லாது உத்தியோகமே செய்வதற்காகவோ? அல்லவே நெல்லுக்கிறைத்த தண்ணீர் புல் முதலிய பூண்டுகளுக்கும் உபயோகமாகாது போலும். ஸ்நான பானத்திற்கு வெட்

டுகிற குளம் தானம் முதலியவற்றிற்கும் உபயுக்தமாவது போல வும், புத்தியின் அபிவிர்த்திக்காக படிக்கப்படும் 'கல்வி, உத்தி யோக முதலியவற்றிற்கும சாதனமாகிறதே தவிற படிப்பது உத்தியோகமட்டும் காரணமெனச் சொல்வது ரெம்பவும் அறியாமையாயிருக்கும்.

சரீரத்திற்கு ஆகாரம் எப்படியோ, அப்படியே கல்வியும் புத்திக்கவசியமாயிருக்கிறது; நமக்கு நாளுக்குநாள் வளரு கிற சரீரத்தை கடவுள் கொடுத்திருந்தாலும், அதர்க்குத் தக்க ஆகாரங்களைக் கொடுதது சௌக்கியத்துக்குள்ள காரியங்களை நாம் தேடிக் கொள்ளாவிட்டால் நம் சரீரம் எப்படி வளராதோ, அப்படியே கடவுள் நம்மை ஞானுத்மாவாக சிருஷ்டித்திருந்தா லும் நம்முடைய சுவபாவ ஞானம் எவ்வளவும் போதாமலிருப் பதால், 'கல்வி, யென்னுமாகாரத்தைக் கொடுத்து புத்தியை அபி விர்த்தி செய்வது நம்முடைய கடமையாயிருக்கிறது " கண்ணு டைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாத வர்" என்னும் குரளில் கற்றவர்களே கண்ணுடையர்களென்றும் கல்லாதவர்கள் முகத்திரண்டு புண்ணுடையவர்கள் யென்று திரு வள்ளுவர் ஸ்திரீ புருஷர்களுக்குப் பொதுவாகச் சொல்லியிருக்கி றாரே யல்லாமல் புருஷர்களுக்கு மட்டும் சொல்லவில்லையே, " குரு டனை செந்தாமரைக் கண்ணன் பென்பதுபோலவும், அஷ்ட தரித் திரம் பிடித்தவளை அன்னபூரணி யென்பதுபோலவும், படியாத பெண்களுடைய கண்களை நீலோத்பலமென்றும் வண்டென்றும் மானென்றும் மீனென்றும் மற்ற வித்துவான்கள் எவ்வளவுதான் வரணித்தாலும் நாமொருநாளும் செப்பமாட்டோம். ஏனென் றால் திருவள்ளுவர்க்கு மற்றப் புலவர்கள் அஜகஜாந்திரமல்லவா? கல்வியென்னும் ஔஷதப் பிரயோகம் செய்து மேலே சொல்லப் பட்ட புண்களைக் கண்களாக காத வரையில் நாம் நம்முடைய கட் சியை விடோம்;

கற்பு என்ற பதத்திற்குக் கல்வி என்றர்த்தமாகிறபடியால்

பெண்களுக்குக் கற்பு வேண்டுமானால், கல்வியும் வேண்டுமென்பது அந்தப் பதத்தினாலேயே விளங்குகிறது.

அன்றியும், புருஷனும், ஸ்திரீயும் ஒரே தேகமென்பது சர்வ சாஸ்திர சம்மதமானதால் புருஷன்மட்டும் படித்துப் பெண்ஜாதி படிக்காமல் இருப்பது பாதி உடலுள் பிராணனும் பாதி உடலுள் பிராணன் இல்லாமலும இருக்கிற பாரிசவாய்வுபோலவும், பாதியுடல் அலங்கரித்துப் பாதி யுடலை அலங்கரியாமல் விடுவது போலவும், இருக்கிறது; இது எவ்வளவு வெட்கக்கேடும் சக்கிலியக் கூத்துமாயிருக்கிறது!

பெண்கள் படிப்பதால், அவர்களுக்கு சகல விவேகமு முண்டாம். அவர்கள் புருஷர்களுக்கு மந்திரிகளைப்போல புத்தி சொல்லுவார்கள்; காரியஸ்தர்களைப்போல வீட்டைச் சார்ந்த கணக்குகளை யெல்லாம் யெழுதிக்கொள்வார்கள்; காவலரைப் போல வீட்டுப் பண்டங்களை யெல்லாம் காத்துக் கொள்வார்கள்; தாயைபோல புருஷர்களை சம்ரட்சிப்பர்கள்; பண்டிதரைப்போலப் புருஷனுடைய தேக ஸௌக்கியத்தை தேடிச் செய்வார்கள்; நல்ல சமயல்காரர்களைப் போல புருஷர்களுக்கு நாவுக்கினிய பக்ஷணங்களைச் செய்து கொடுத்து போஷிப்பார்கள்; சங்கீத வித்வான்களைப்போல புருஷனுடைய செவிக்கினிய பதங்களைப்பாடியும், இங்கிதமான வார்த்தைகளைப் பேசியும், புருஷர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள்; அன்றியும் சிநேகிதரைப்போல புருஷர்களுடைய ஆபத்துக்குதவுவார்கள்; ஒருவேளை பிசகாய் நடந்தால் அவர்களுக்கு குருவைப்போல உபதேசம் செய்வார்கள்; பெண்களுக்குப் படிப்பு யில்லாமையினால், இவ்வளவு நன்மைகளையும் தவிர்த்துப் புருஷர்கள் தம் தொழிலைச் சார்ந்த வெளி வேலைகளுடன் கூட வீட்டைச் சேர்ந்த காரியங்களையும் பார்த்துக்கொண்டு "இரண்டு குதிரைகள் கட்டி இருக்கவேண்டிய ரதத்தை ஒரு குதிரைமட்டும் இழுப்பது" போல சிரமப்பட வேண்டியிருக்கிறது.

அன்றியும், பெரிய குடும்பங்களில் அனேக பந்துக்களும், பிள்ளைகளும், வேலைக்காரர்களும் இருக்கிறபடியால் அடிக்கடி கலகங்களும், மனஸ்தாபங்களும் உண்டாகுமே! குடும்பத் தலைவி அவிவேக சிரோமணியாயிருந்தால், அவள் அந்தக் கலகச் சண்டைகளை நிவர்த்தி செய்யவும் மற்றவர்களுக்குப் புத்தி புகட்டவும், எப்படி சாத்தியமாகும்? குருடனுக்குக் குருடன் வழி காட்டவும், மூடவனுக்கு மூடவன் சிலம்பம் கற்றுக்கொடுக்கவும் கூடுமா? நிரக்ஷரகுக்ஷியானக் குடும்பத் தலைவியானவள், வேலைக்காரர்கள் செய்கிற திருடுகளையும் புரட்டுகளையும், மோசங்களையும் கண்டுபிடித்து பொருட்சேத மில்லாமல் குடும்ப பாரத்தை எப்படிப் பரிபாலிக்கக்கூடும்? "நாடன் ஆஸ்திமுழுவதும் நாஸ்தி" யென்பதுபோல பெண்களுக்கு படிப்பில்லாமையினுல் திரவிய நஷ்டம் ஸம்பவிக்கவும் இடமுண்டாகிறது; பெண்கள் படித்திருந்தால் அவர்கள் வீட்டு வேலைகள் செய்கிற நேரம்போக மற்ற நேரங்களில் நல்ல புஸ்தகங்களை வாசித்துத் தங்களுடைய புத்தியை அபிவிருத்திசெய்யவும் குழந்தைகளைப் படிப்பிக்கவும், தக்கவர்களாயிருப்பார்கள். அப்படி இல்லாமையினுல் ஸ்திரீகள் வீண்பேச்சும், கோளும், புரளியும், பேசி துன்மார்க்கங்களை கற்றுக்கொள்ள இடமுண்டாகிறது.

அன்றியும் சிறுசிறு குழந்தைகளுக்குத் தகப்பனை விடத் தாய்மார்களிடத்தில் அதிகப் பழக்கமிருப்பதால் "பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தையும் கூடப் பிடித்தது" போல படிப்பில்லாத தாய்மார்களுடைய அறியாமையும், துற்குணமும், பிள்ளைகளையும் சாரும்படியாயிருக்கிறது.

புருஷர்களைப் பார்க்கிலும் பெண்டுகளுக்கு அதிக அவகாசமிருப்பதால் ஔவை, முதலானவர்களைப்போல அனேகப் பிரபந்தங்களுண்டுபண்ணவும், நூதன காரியங்களைக் கண்டு பிடித்துச் செய்யவும், ஆதனுல் இத்தேசம் யூரோப்தேசத்தைப்போல் சீக்கி

M211, N05 N05:5

ரத்தில் கல்விச் செல்வங்களில் மேன்மை அடையவும் இடமுண்டாகுமென்பது கரதலாமலகம்போல் விளங்க வில்லையா?

டி. கே. இராமபத்ரசர்மா.

# சிறுவர்க்கான நூதனக் கதைகள்.

மிகவும் எளிய வேலைக்காரனொருவன் ஒருநாள் சாயங்காலம் தன் வேலை முடிந்தபிறகு அதிக இளைப்புடன் தெருவின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தான். அத்தெருவில் தின்பண்டங்கள் விற்கப்படும் கடை யொன்றிருந்தது. வேலைக்காரன் தின்பண்டங்களிலில் சிறிதேனும் வாங்கக் கூடாததினால் பரிதபித்தான். அவன் கடையினெதிரில் நின்றுகொண்டு தின்பண்டங்களின் வாசனையை முகர்ந்து திருப்தியடைந்தான். உடனே கடைக்காரன் கடையினின்றும் புறப்பட்டு வெளிவந்து வேலைக்காரன் கையைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டு "நீ என்னுடைய தின்பண்டங்களின் மணத்தை முகர்ந்ததினால் அவைகளின் பாதிக்கிரயத்தைக் கொடுக்காவிடில் உன்னை நான் விடமாட்டேன்" என்றான். அவ்வெளிய வேலைக்காரன் பணத்திற்கு எங்கே போவான்? ஆகவே அவன் யாதும் கொடேனென்று மறுத்து வழியில் போய்க்கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வழக்கைத் தெரிவித்தான். இன்ஸ்பெக்டர் வேலைக்காரனிடம் இரண்டு காலணுக்கள் இருப்பதாகத் தெரிந்து அவனைப் பார்த்து "தின்பண்டங்களின் வாசனையை முகர்ந்ததினால் கடைக்காரனை நீ திருப்திபடுத்தவேண்டியது அவசியந்தான். ஆகவே இரண்டு காலணுக்களையும் எடுத்துக்கொண்டு ஓசை உண்டாக்கு" என்றான். வேலைக்காரன் அப்படியே செய்ய இன்ஸ்பெக்டர் கடைக்காரனிடம் "யானைக்கும் பானைக்கும் சரியாய்ப் போனதுபோல் வேலைக்

காரன் தின்பண்டங்களை முகர்ந்ததிற்கும் நீ பணவோசையைக் கேட்டதிற்கும் சரியாய்ப் போயிற்று" என்று சொல்லிப் போய் விட்டான்.

ஒரு காலத்தில் ஒரு குடியானவனிருந்தான். அவன் மிகவும் கஷ்டப்பட்டு நிலத்தை உழுது ஜீவனம் செய்து வந்தான். அவனுக்கு மூன்று புத்திரர்களிருந்தார்கள். இவர்கள் முழுச் சோம்பேறிகளாய் வேலை யொன்றும் செய்யாமல் காலத்தைக் கழித்து வந்தார்கள். தகப்பனார் இறக்குங்கால் மூன்று புத்திரர்களையும் தன்னருகில் அழைப்பித்து "என் செல்வக் குமாரர்களே! இவ்வளவு நாளாய் எனதநுபவத்திலிருந்த நிலத்தை உங்கள் கைவசம் ஒப்புவிக்கிறேன். அதை ஜாக்கிரதையாய் பயிர் செய்யுங்கள். மேலும் அந்நிலத்திலொரு புதையலிருக்கிறது.—என்று அரைகுறையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும்போழுதே அவன் இறந்து போயினன். தகப்பனுக்குச் செய்யவேண்டிய கிரியைகள் முடிந்தவுடனே பிள்ளைகள் மூவரும் புதையலை யெடுக்க நிலமுழுதும் தோண்டினார்கள். புதையலொன்று மகப்படவில்லை. ஆனால் மூன்று சோம்பேறிகளும் வேலை செய்யக் கற்றுக்கொண்டார்கள். பயிரும் நன்றாய் விளைந்து ஏராளமான தானியத்தைக் கொடுத்தது. இதுதான் தகப்பனார் சொல்லிய புதையலென்று மூன்று சோம்பேறிகளுமறிந்து அதுமுதல் நன்றாய் உழைத்து ஜீவனம் செய்தார்கள்.

பிராஞ்சு தேயத்திலொரு ஜோஸ்யனிருந்தான். அவன் அத்தொழிலில் தேர்ச்சியற்றவனாயினும் தனது சாமர்த்தியத்தினால் அநேகரை ஏமாற்றிப் பொருள் சம்பாதித்தான். அவன் பிராஞ்சு தேசத்து அரசனுடைய தோழனொருவனின் சாவைப்பற்றிக் குறி சொன்னான். அது தற்செயலாய்ப் பலித்துவிட்டது. அதனால் அரசன் ஜோஸ்யனை அழைத்து அவனுடைய சாமர்த்தியத்தை மெச்சி தன்னுடைய ஆயுள் முடிவையும் தெரிவிக்கும்படி வேண்டினன். ஜோஸ்யன் மிகவும் வணக்கத்துடன் "ஐயா! பிரா

தடம் பொருந்திய நீர் இறப்பதற்கு மூன்று நாள் முன்னதாக நானிறப்பேன்" என்றான். ஜோஸ்யன் இந்த அதிசயமான வார்த்தைகளால் பிழைத்தான். ஏனெனில் பேதமையான அரசன் ஜோஸ்யனை அதிஜாக்கிரதையோடு பாதுகாப்பதால் தன்னுயிரும் வளருமென்று நினைத்து ஜோஸ்யனை மெத்த உபசாரணையோடும் ஜாக்கிரதையோடும் பாதுகாத்து வந்தான்.

பிச்சைக்காரனொருவன் பிழைப்பதற்கு அநேக தந்திரங்கள் செய்தும் பயன்படாமல் போனதால் ஊமையாயிருப்பதுபோல் பாசாங்கு செய்தான். இவ்விதத்தினால் அவன் அநேகரை வஞ்சித்துப் பணம் சம்பாதித்தான். அவனைச் சேர்ந்த ஒரு கனவான் திடீரென்று அவன் முன்பாகவந்து "நீ எவ்வளவு நாளாய் ஊமையாயிருக்கிறாய்?" என்றுக் கேட்டான். பிச்சைக்காரன் திடீரென்று கனவானைச் சந்தித்ததால் தான் ஊமையாயிருப்பதை மறந்து "இளமை தொட்டே" என்று பிரதி யுத்தரமளித்தனன். பின் பிச்சைக்காரன் கனவானால் தண்டிக்கப்பட்டான்.

திடீரென்று ஏதாவது நடப்பின் அது உள்ளத்தை மறைத்துவிடுமாதலால் உண்மை தானாகவே வெளிவந்து விடும்.

## FUN AND ANECDOTE

## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்,

எதையும் யோசித்துச் சொல்லு.

ஒருவன் இராஜாவுக்கு ஆருடஞ் சொல்லி அநேகம் வெகுமானங்களைப் பெற்றுக்கொண்டு வந்தான். அதைப் பார்த்து மனம் பொறாமல், அவன் பக்கத்து வீட்டுக்காரி தம்முட்டிக்

காய் பத்தனென்ற தன் முட்டாள் புருஷனைப் பார்த்து எங்கே யாகிலும் போய் ஆரூடம் கற்றுக்கொண்டு வாவென்று கட்டுச் சாதம் கட்டிக் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக்கொண்டு போய் ஒரு குளத்தண்டையிலே சாப்பிட்டு விட்டு அங்கிருக்கிற மரத்து நிழலிலே படுத்துக் கொண்டிருக்கையில், வளை தோண்டிக்கொண்டிருந்த ஓர் எலியைக் கண்டு "எலி வளை தோண்டக் கண்டே"னென்றும் "புற்றின் மேலே ஆந்தை விழிக்கக் கண்டே"னென்றும் ஒரு பனைமரத்தைக் கண்டு "நெட்டைப் பனை மரம் நிற்கக் கண்டே"னென்றும் ஓடிய மானைக்கண்டு "மானோடக் கண்டேன்" என்றும் பாடம் பண்ணிக்கொண்டு வீட்டிற்குப் போய் ஆரூடங் கற்றுக்கொண்டு வந்தேனென்றான். அன்றை இராத்திரி அவனும் அவன்பெண்சாதியுமாய் படுக்கைவீட்டிலிருக்கையில் திருடன் வந்து அந்த வீட்டுச் சுவரிலே கன்னம் வைத்துக் கொண்டிருந்தான். அப்போது அவள் நீ கற்று வந்த ஆரூடத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டாள். எலி வளையைத் தோண்டக் கண்டேனென்றான். அதைக்கேட்கவே திருடன் தான் தோண்டுகிறதை அவன் மறை பொருளாகச் சொன்னானென்று திடுக்கிட்டு விழித்தான். புற்றிலே ஆந்தை விழிக்கக் கண்டேனென்றான். தான் விழிக்கிறதை அவன் சொல்லுகிறானென்று எழுந்து நின்றான். நெட்டைப் பனைமரம் நிற்க கண்டேனென்றான். தான் நிற்கிறதைச் சொல்லுகிறானென்று ஓட்டம் பிடித்தான். மான் ஓடக் கண்டேனென்றான். தான் ஓடுகிறதைச் சொல்லுகிறானென்று காற்றாய்ப் பறந்தான். இவைகளை பார்த்துக்கொண்டிருந்த ஒருவனால் அந்த முட்டாள் உள்ளது உள்ளபடி ஆரூடஞ் சொல்லுகிறவனென்ற பெயர் பட்டண மெல்லாம் பரவியது. அதைக்கேட்ட வண்ணான் தன் கழுதை காணமற் போனதைக் குறித்து ஆரூடம் கேட்டான். அதற்கு கழுதை கேட்டால் குட்டிச் சுவர் தானென்றான். அந்தப்படியே வண்ணான் ஒரு குட்டிச் சுவரை எட்டிப் பார்க்க அங்கிருந்து கழுதை வெளிப் பட்டது. இந்தச் சமாசாரத்தை வண்ணான் இராஜாவரைக்கும்

தெரியப்படுத்தினன். இப்படி யிருக்கும் சமயத்தில் ஒருநாள் அரசன் வீட்டிலிருந்த உடைமைப் பெட்டியை மூக்கி, நாக்கிஎன்ற இரண்டு வெள்ளாட்டிகளும் சேர்ந்து திருடிக்கிணற்றில் போட்டு விட்டு ஒன்று மறியாதவர்கள் போலிருந்தார்கள். அரசன் தன் அரண்மனையில் போன திருட்டை குறித்து இந்த மூட ஜோஸ்யனை அழைத்துக் கேட்டான். அதற்கு அவன் எட்டு நாளிலே பிடித்து கொடுக்கிறேனென்று கெடுவு சொல்லிவிட்டு வந்து ஏழு நாள் மட்டும் சும்மாவிருந்து எட்டாம்நாள் காலமே கெடுவு ஆய் விட்டதே இனி எனக்கு நாக்கே போமோ மூக்கே போமோ வென சொல்லிக்கொண்டே குளக்கரையில் பல் விளக்கிக் கொண் டிருந்தான். திருடின இருவரும் தண்ணீருக்கு வருகிறபொழுது அவன் சொல்லுகிறதைக் கேட்டு திடுக்கிட்டு தாங்கள் திருடின தைத் அவன் தெரிந்துகொண்டு சொலலுகிறானென்று நிச்சயம் செய்துகொண்டு சமீபத்தில் வந்து ஐயா! உடைமை பெட்டியைத் திருடினவர்கள் நாங்களே. அதைக் கொணர்ந்து ஒப்பிவுத்து விடு கிறோம். எங்களுக்கு யாதொரு கஷ்டமு மில்லாமல் பாதுகாக்க வேண்டும் என்று கெஞ்சி வேண்டிக்கொண்டனர். அப்பொழுது அவன், நாம் இன்றைக்கு நரி முகத்தில் விழித்தோம் என்று மிகவும் சந்தோஷப்பட்டு மனம் பூரித்து அவர்களை நல்லது என்று தேற்றி உடைமைப் பெட்டியையும் அவ்விருவரையும் அர சனிடம் கொண்டு ஒப்பிவுத்து இவர்கள் குற்றத்தை மன்னித் தருள வேண்டுமென விளம்பினன். அப்படியே மன்னன் மன் னித்து ஜோஸ்யனுக்கும் கொடை அளித்து சம்பளம் பண்ணி தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு பிற்பாடு ஒருநாள் தானும் ஜோஸ்யனுமாக போகிறபோது நதிக் கரையிலே ஒரு சிறிய தும்மட்டிக்காயை பறித்து ஜோஸ்யனுக்குத் தெரியாமல் தன் கைக்குள்ளே மூடி வைத்துக்கொண்டு இது என்னவென்று கேட்டார். ஜோஸ்யன் தான் அகப்பட்டுக் கொண்டோ மென்று நினைத்து "அங்கே தப்பி இங்கே தப்பி அகப்பட்டு கொண்டான் தும்மட்டிக்காய் பத்தனெ"ன்று சொன்னன்.

அதுகேட்டு ராஜன் தும்மட்டிக்காய் யென்று கண்டுபிடித்தா னென்று மிகவும் சந்தோஷமடைந்து வேண்டிய வெகுமதிகளை க்கொடுத்தனுப்பி விட்டான். ஆகையால் அதுவே ஒரு புதூராக வழங்கி வருகிறது.

கௌரவமாய் யிருக்க விரும்பினுல் உள்ளதே போதுமென்று எண்ணு.

ஒருவன் தன் பெண்சாதி செய்கிற தப்புக்களிலே மூன்று வரைக்கும் சொன்னுல் பொறுத்துக் கொள்வாள். அதற்கு மேல் அவள் சொன்னுல் அப்போது அவள் கையிலிருக்கிற சட்டியை பட்டென தலையிலே போட்டு உடைப்பாள். அப்படியே பட்டுப் பட்டு தல மொட்டையாய் போனது போருமென்று நினைத்து அலுப்புற்று எங்கேயாகிலும் போவோமென்று போகும் போது அவனை அவன் சிநேகனுகிய ஓர் தப்பை கேட்ட மாத் திரத்திலே சட்டியை தலையிலே போட்டு உடைக்கிறவளுடைய புருஷன் கண்டு தன் வீட்டுக்கு அழைத்து சென்று அனுஷ்டா னம் பண்ணிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். வீட்டுக் காரி சட்டியிலே சாத மெடுத்துக்கொண்டு வந்து முன்னே தன் புருஷனுக்கு வடித்து பிறகு விருந்தாளிக்கு வடித்தாள். புரு ஷன் முன்னே அவருக்கு வடித்துவிட்டு பிற்பாடு யெனக்கு வடிக்கலாகாதா வென்முன். அந்தச் சட்டியை புருஷன் தலை யிலே போட்டு உடைத்தாள். அது உடையும்போது கலவடை எழும்பி விருந்தாளி கழுத்திலே மாட்டிக்கொண்டது. இவ ளைப் பார்க்கிலும் தன் பெண்சாதியே குணசாலி யென்று மனதி லெண்ணிக்கொண்டு "வீணுவுடைத்த சட்டி வேணதுண்டு என தலையில் பூணுரம் பூண்ட புதுமை தனை கண்டதில்லை" யென் முன். ஆதலால் பெரும்பாலும் இது ஒரு புதூராகவே வழங்கி வருகிறது.

கவனித்துச் செய்.

ஒரு துலுக்கன் ஒரு பெரிய ஊரிலே கடைக்குப்போய்

தேன் வாங்கும்போது ஒரு துளித்தேன் கீழே சிந்தியது. அதன் மேலே ஈ வந்து மொய்த்தது. அந்த ஈயை அங்கிருந்த பல்லி பிடித்துக் கொண்டது. அந்தப் பல்லியை கடைக்காரனுடைய பூனை பிடித்துக்கொண்டது. அந்தப் பூனையை துலுக்கனுடைய நாய் கடித்துப்போட்டது. அந்த நாயை கடைக்காரனடித்துக் கொன்று போட்டான். அந்தக் கடைக்காரனை துலுக்கன் வெட்டிப் போட்டான். அந்தத் துலுக்கனை மற்றக் கடைக்காரர்கள் வெட்டிப் போட்டார்கள். அந்தக் கடைக்காரர்களை துலுக்கர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். துலுக்கர் சூழ்ந்துகொண்டதைப் பார்த்து கடைக்காரர்களுக்காக வெகுபேர் கூடினார்கள். அவர்களு மிவர்களும் கைகலந்து சண்டை செய்ய அந்தப் பக்கத்திலே நூறுபேர்சாகவே, பட்டணத்து ஜனமெல்லாம் பயந்து அல்லோல கல்லோலப்பட்டு வலசை வாங்கியது.

## கல்விச்சாலை பிள்ளைகளுக்காகத் தோட்டம் போட்டு அதை உபயோகிக்கும் முறை.

சிறுவர் வாசிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அதற்கென்று ஒரு தோட்டம் அவசியம் இருக்கவேண்டும். எழுதப் படிக்கவும் லேசாகக் கணக்குப் போடவும் குழந்தைகளுக்குத் தெரியவேண்டியது முக்கியமே. ஆனாலும் பின்னீடு பிழைப்புக்கு உதவும் மற்ற விஷயங்களையும் அவர்களறிந்திருக்க வேண்டியது அவசியம். குடிகளில் பெரும்பாலோர் விவசாயத்தையே நம்பி காலங் கழிக்கும் இடங்களில், ஜீவனோபாயத்திற்கு வேண்டிய விஷயங்களை கட்டாயம் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும். பிள்ளைகளை விஷயங்களைக் கவனித்துப்பார்க்கப் பழக்கவேண்டும். பொருள்களை கண்ணால் கண்டால்மட்டும் போதாது. பார்த்த வஸ்துக்

கள் இன்னதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். பாடசாலைத் தோட்டங்களை ஒழுங்காய்க் கையாண்டால், குழந்தைகளுக்கு மேற்சொன்ன பயிற்சி உண்டாவதற்கு அவைகள் சிறந்த சாதனமாகும். பாடசாலைப் பிள்ளைகளின் தோட்டம் மற்றொரு விதமாயும் பயன்படும். தோட்டத்து வேலைகளை அவர்களையே செய்ய விட்டுவிட்டால் செய்யவேண்டிய முறைகளை மட்டும் அறிந்துகொள்வதோடிராமல் முறைப்படி செய்யவும் பழகிக்கொள்வார்கள். விஷயங்களை செவ்வையாய் கவனித்தறிதல், அவைகளின் காரணகாரியங்களை உணர்தல், ஒவ்வொன்றையும் தாங்களாகச் செய்துகொள்ளத் திறமையுள்ளவர்களாதல் முதலிய பிற்காலத்தில் ஜீவனங்கழிக்க உபயோகப்படும் முக்கிய உபாயங்களை அறிந்துகொள்வதற்கு இந்தப் பாடசாலைத்தோட்டம் உபயோகமாகும். இடத்தை சுத்தமாயும் பணிக்கையாயும் வைத்துக்கொள்ளும்படி செய்தால் அவர்களுக்கு ஒழுங்கும் சுத்தமும் பிடிபடும். மண் ஒன்றுக்கும் ஆகாததாயிருந்தால் சில மண்ணெண்ணெய் டப்பாக்களை வைத்துக்கொண்டு கூடியமட்டிலும் அழகான சிறு தோட்டமொன்று உண்டாக்கிவிடலாம். மேல் மூடியை வெட்டித் திறந்து, ஓரங்களை லட்சணமாய் உள்ளே மடக்கிவிட்டால் பெரிய செடிகளையே அவைகளில் வைத்துண்டாக்கலாம். டப்பாக்களுக்கு செகப்புவர்ணம் அடித்துவிட்டால் பார்க்க வெகு அழகாயிருக்கும். மிகவும் விநோதமான செடிகளிருக்கும் தோட்டங்களில் மண்ணெண்ணெய் டப்பாக்களிலேயே செடிகளை வைத்துண்டாக்கியிருப்பதைக் கண்டிருக்கிறேன். ஆனால் தரைதான் செடிகளை வைத்துண்டாக்க ஏற்ற இடம். மண் கெட்டதாயிருந்தாலும் நாளாவட்டத்தில் சுலபமாய்த் திருத்திக்கொள்ளலாம். தண்ணீர் மட்டும் கட்டாயம் சமீபத்திலிருக்கவேண்டும். ஆரம்பத்தில் வைத்து நிர்வாகம் பண்ணமுடியாத அதிக விஸ்தீரணத்தில் தோட்டம்போட எத்தனிப்பதிலும், மிகச் சிறு தோட்டம் ஒன்று முதலிற் போட்டுக்கொண்டு வரவர இடம் கூட்டிக்கொள்வது மிகவும் சிலாக்கியம். பலத்த வறட்சியான காற்றடிக்

கும் இடங்களில் வேலிபோட்டு செடிகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். கொருக்காப்புளி, மலைவேம்பு (நாய்வேம்பு), அகத்தி, கள்ளி வகைகள், ஆனைக்கற்றாழை (ரயில் கற்றாழை) இவைகள் வேலிக்காகும். சப்பாத்துக்கள்ளி உதவாது. கூடுமானால் தோட்டத்தைச் சுற்றிலும் மரங்களை வைத்துண்டாக்கலாம். வெய்யில் படாதபடி நிழல் உண்டாக்குவதைவிட காற்றடியாதபடி பந்தோபஸ்து செய்யவேண்டிய தவசியம் மனிதரும் மாடும் உள்ளே நுழையாதபடி தடுக்க தோட்டத்திற்கு சுற்றிலும் வேலி அடைப்பதவசியம்.

முளை கிளம்ப விதை பிளப்பது முதல் பூத்துக் காய்க்கும் வரை வளர்த்துவந்து ஒவ்வொரு பருவத்திலும் செடிகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். வெய்யில், காற்று, மழையினால் கெடுதி விளையாமல் பந்தோபஸ்தாய் விதைகளை சட்டிகளில் விதைக்கக் கற்றுக்கொடுக்கவேண்டும். நாற்றுகள் அதிக சின்னதாயிருக்கும் போது இரண்டொரு இலைவிட்டு வளர்வதற்கு போதுமான இடம் விட்டு, அவைகளைப்பிடுங்கி ஒப்புரவாயிருக்கும் வேறொருபத்தியில் நடவேண்டும். பிறகு வேரைச்சுற்றிலும் இருக்கிற மண்ணோடு சேர்த்து நாற்றைப்பிடுங்கி அதை நட எண்ணியிருக்கிற இடத்தில் நடவேண்டும். பாத்திகளுக்கு மத்தியில் நல்ல சரள்போட்ட பாதைகளிருக்கவேண்டும். பாத்திகளை மிதித்து உழப்பக் கூடாதாகையால் அதிக அகலமாயிராமல் ஒவ்வொரு செடியும் கைக்கெட்டும்படி இருக்கவேண்டும். பூக்கிற செடிகளுக்கு சூரிய வெப்பம் மிகுதியாய் வேண்டியிருக்கிறது. இலைப்பயிர்களுக்கோ நிழல்தேவை. சிறு பூண்டுகளை வெளிப்புறங்களிலும், வேண்டியபடி இடமிருந்தால், பத்தியிலும் இங்குமங்குமாக நட்டு வைக்கவேண்டும். மரங்களின் வேர்கள் பாத்திகளிலிருக்கும் செடிகளுக்கு இடைஞ்சலாயிருக்குமாதலால் (தோட்டத்திற்கு) வெளியில் கூடியமட்டில் மரங்களைத் தள்ளியே நடவேண்டும். இவ்விதமாகச்செய்தால் அழகிய பிரகாசமான வர்ணப் புஷ்பங்

கள் நடுவிலிருக்கும் வெளியிலும், ஓரங்களில் இலை அடர்ந்த செடிகளும், பூண்டுகளும் மரங்களும் வெளிப்புறத்திலுமாகவிருக்கும் புஷ்பங்களெல்லாம் அலங்காரமாய்த் தெரியும்பொருட்டு கொஞ்ச நிலத்தில் புல்லுண்டாகும்படி செய்யவேண்டியது. ஆனால் புல்லில் களைபற்றாமல் வைத்துக்கொள்ளவேண்டும். தோட்டத்தின் படம் (ப்ளான்) ஒன்று எழுதி அதிலுள்ள எல்லாப்பாதைகளையும் பாத்திகளையும் அதிற் காணவேண்டியது. ஒவ்வொரு படத்திலும் என்ன செடிகள் வைத்துண்டாக்குகிறோமோ அவைகளை அதிற் காட்டவேண்டியது. ஒவ்வொரு தினுசு நடுகையும் பிள்ளைகளைக்கொண்டு செய்விக்கவேண்டியது. அவர்களைக் களையெடுக்கவும் பாதைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளவும் பழக்கவேண்டியது. களைகளையும் இலைகளையும் மரங்களிலிருந்து கழிக்கும் கொம்புகளையும், தோட்டத்திலிருக்கும் செத்தைகளையும் ஒதுக்காயிருக்கும் மூலையில் ஒரு குழிவெட்டி அதிற்போட்டு பத்திலே எட்டிலே கொஞ்சம் மண்ணை இதின்மேல் பரப்பவேண்டும். இந்தக்களைக்கிடங்குதோட்டத்தோடு அவசியம்சேர்ந்திருக்கவேண்டியவைகளில் ஒன்று. அவைகளைகளெல்லாம் நன்றாய் மட்கிப்போய அவைகளின் விதைகளெல்லாம் கெட்டுப்போனபின் அதிலிருக்கும் மட்கிய இலையுரம் சட்டியில் செடி வைத்துண்டாக்கவும் மண்ணைத்திருத்தவும் உதவும். ஒவ்வொரு செடியிலும் ஏதாவது ஒரு விநோதமிருக்கிறதனால் சிருஷ்டியிலிருக்கும் எண்ணிறந்த வேறுபாடுகளைக் கொஞ்சங்கொஞ்சம் பிள்ளைகள் அறியும்பொருட்டு இயன்ற அளவு பற்பலவிதமான செடிகள் வைத்து (தோட்டத்தில்) உண்டாக்க முயலவேண்டும். பலவிதப் பயிர்கள் (தோட்டத்தில்) இருந்தால் உபாத்தியாயர் அன்றன்றைய பாடத்திற்கு வேண்டிய செடிகளைமட்டும் பார்த்து வைத்துக்கொள்ள வெகுலகுவாயிருக்கும். ஒழுங்காய் ஏற்படுத்தியிருந்தால் பாடசாலைப் பிள்ளைகளின் தோட்டத்தில் ஒரு செடியின் ஒவ்வொரு அங்கத்தின் உபயோகம், நோயற்றிருப்பதற்கும், நோயுண்டாவதற்கும் காரணம், (என்று முள்ள) பயிரை

அழிக்கும் பிராணிகளும், பூடுகளும், சூரிய வெப்பம், வெளிச்சம், காற்று, நிழல், நீர்பாய்ச்சல், காய்ச்சல் இவைபோன்ற காரணங்களால் ஒரு செடியின் சீவதசையில் ஒவ்வொரு பருவத்திலும் ஏற்படும் குணபேதங்களையும் தெளிவாய் உதாரணங்களோடு எடுத்துக்காட்டலாம்.

சி. எ. பார்பர், கவர்ன்மெண்டு பாடனிஸ்ட்

# குற்றங்களைக் குறைக்கும் வழி.

பொதுவாய்த்திருட்டுத்தொழிலைக் கைக்கொண்டு அதனால் ஜீவிக்கிற சில ஜனங்கள் மகா புத்திசாலிகளாய் இருக்கவேண்டும். அநேக இடங்களில் அவர்கள் திருடின விஷயத்தைப்பற்றிக் கேட்டால். கேட்போருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும் சக்தி அவர்களிடமிருக்கிறதாய்த் தெரியும். அவர்களுக்கு மற்ற ஸாமான்ய ஜனங்களைவிட தைரியமும் மிகவும் அதிகம். தேக பலமும் ஜாஸ்தியாகவே இருக்கும். கூர்மையான புத்தியும் இருக்கும். இப்படிப்பட்டவர்களை நல்வழிப்படுத்தினால் தேசத்துக்குப் பெருத்த க்ஷேமமும் லாபமும் உண்டாய்விடும். அவர்கள் செய்யும் அநேக கொலைகளும், களவுகளும் நிற்கும்.

கொலை செய்தவர்களைப்பற்றி மறுகொலை வாங்கவோ அல்லது தீவாந்தரம், ஏற்றவோ தண்டனை விதித்திருக்கும் சட்டத்தின் தாத்பரியம், அவர்களை தண்டித்து விட்டுவிட்டால் மறுபடியும் கொலையையே அவர்கள் செய்யத் துணிவார்கள், அவர்களுக்கு அது கசாப்புக்காரன் தொழிலாய்ப்போகும் என்று நினைத்துச் செல்கிறதாகஎன் அபிப்ராயம். அப்படிக்கிருக்க, திருடினவர்களை தண்டித்து உடனே விடுவதை அவர்கள் தங்களுக்கு

புத்தி புகட்டுவதாக வைத்துக்கொள்ளுகிருர்கள். எந்த விதத்தில் எனில், முந்தி அஜாக்கிரதையாய்த் திருடினுய், அதில் அகப்பட்டுக்கொண்டாய், இனி ஜாக்கிரதையாய் அத்தொழிலைச் செய் என்று சொல்லுவதுபோல் அவர்கள் எண்ணுகிருர்கள். இப்படி நாம் நினைப்பதற்குக் காரணம் விசேஷமாய்த் திருட்டுக் கேஸ்களில் பழய குற்றவாளிகளே ஜாஸ்தியாக இருக்கிருர்கள். இதுவே திருடர்கள் தாங்கள் இனி திருடக்கூடாது, திருடினுல் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்துகொள்ளாமல் தங்களை ஜாக்கிரதையாய்த் திருடச்சொல்லியிருப்பதாக நினைத்துக் கொள்ளுகிருர்கள் என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இதைத் தடுப்பதற்கு கவர்ன்மெண்டார் அடியில்கண்ட ஏற்பாட்டைச் செய்தால், திருட்டுத்தொழில் அடியோடு கொஞ்ச காலத்திற்குள் நின்றுவிடும். அதாவது:—

ஸர்க்கார்ச் செலவில் ஜில்லாவுக்கு ஒரு பெரிய விவசாயப் பண்ணை ஏற்படுத்தி, அதில் அந்தத் திருட்டுத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்களை சாகுபடி முதலிய வேலைக்கு நியமித்தல், அவர்கள் காலக்ஷேபத்துக்கு போதுமான சம்பளம் ஏற்படுத்தல்.

ஜெயிலில் பலவித கைத்தொழில் வேலைகள் செய்வதுபோலவே அவ்விடங்களில் பெரிய தொழிற்சாலைகளும் ஏற்படுத்தி அவைகளில் பழகினவர்களை மேற்படி தொழிற்சாலைகளில் நியமித்துச் சம்பளம் ஏற்படுத்தல்.

பழைய குற்றவாளிகளைத் தண்டித்துவிடும்போது கேடிகளாக ரிக்கார்டு செய்து அவர்கள் ஆஜர் பார்க்கப்படுவதை ஒழித்து ஜெயில்தண்டனைக்கு அப்புறம் ஸர்க்கார்ப்பண்ணை அல்லது தொழிற் சாலைகளில் இவ்வளவு காலம் வேலைசெய்துவரவேண்டும் என்று விதித்தல். இதனுல் அவர்களுக்கு சம்பாதிக்கக்கூடிய புதுத்தொழில்கள் பழகி திருட்டுத் தொழில்கள் மறந்துபோய் நின்றுவிடும். திருட்டுக் கேஸுக்காக தண்டிக்கும் காலத்திலேயே ஜெயிலில் இருக்கவேண்டிய காலம் ஒரு மாதமாக ஏற்பட்டால்

ஸர்க்கார்ப்பண்ணை அல்லது தொழிற்சாலைகளில் கூலிவேலைசெய்து தீரவேண்டியது ஒரு வருஷம் என்று ஏற்படுத்திவிடலாம், தவிரவும், அவ்விடத்தில் குறைந்த சம்பளம் இவ்வளவு என்று ஒரு ஸ்கேல் ஏற்படுத்திக்கொண்டு, பிறகு கைச்சாதுர்யம், புத்திசாலித்தனம் இவைகளுக்குத் தகுந்தபடி சம்பளம் உயர்த்திக் கொடுத்தால் அவர்கள் அங்கேயே தங்கிவிடுவார்கள். அவர்கள் குடும்பத்தில் உள்ள மெம்பர்களுக்கும் அவ்விடத்திலேயே வேலைகள் உண்டாக்கி அவர்களையும் அதில் வேலை செய்துவரச்செய்யலாம். இதனுல் ஏற்படும் செலவு ஜாஸ்தி ஆகும் என்று நினைத்தாலும் அது நல்ல செலவாகவும், தேச க்ஷேமத்தின்பொருட்டு ஏற்பட்ட செலவாகவும் ஏற்படும்.

தவிர, திருட்டுத்தொழிலில் பயின்றவர்களுடைய குடும்பத்தார்களும் அப்படிப்பட்ட தொழிற்சாலைக்கு ஸமீபத்தில் குடியேறிவிடுவார்கள். அவர்கள் பெண்ஜாதி பிள்ளைகளும் அதே தொழிற்சாலைகளில் அல்லது பண்ணைகளில் வேலைக்கமர்ந்து திருட்டுத்தொழில் வேரோடு தொலைந்துவிடும். புதிதாய்த் திருட எத்நனப்படுகிறவர்களும் குடியேற்றம் நேரிடும் என்கிற பயமும் கொள்ளுவார்கள்.

திருட்டுக் கேஸ்களில் சம்பந்தப்பட்ட நபரை திருட்டுத் தண்டனைக்குள்படுத்த சட்டப்படி போதுமான ருஜு இல்லாத ஸமயத்திலுங்கூட அவர்களை மேற்கண்ட ஸர்க்கார்த் தொழிற்சாலை அல்லது பண்ணைகளில் இவ்வளவு காலம் வேலைசெய்ய வேண்டியதென்று ஏற்பாடு செய்துவிடலாம்.

இதற்கு ஆவசியமான திருத்தச் சட்டங்களை வேண்டுமானுலும் ஏற்படுத்திக்கொண்டு கவர்ன்மெண்டார் செய்வார்களானுல் தேசத்தில் திருட்டுபயம் ஒழியும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் போலீஸ் சிப்பந்திச்செலவும் குறையும். இப்படிப்பட்ட பெரிய கே டி. லிஸ்டில் சேர்க்கப்படவேண்டிய அல்லது முரட்டுத்தனமுள்ளவர்களை பழைய நேட்டிவ் ராஜாங்கத்தார்கள்

அவர்களுக்குத் தங்கள் ஆதீனத்தில் ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து வேலைவாங்கி வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

அப்படிப்பட்ட திருடர்களுடைய தேகபலம், மனோபலம் முதலியவைகளும் வீணில் துர்வியாபாரத்தில் செலவாகாமல் அவர்களுக்கு ஏற்படும் தொழில் ஊக்கம் காட்டி அதிக விருத்தியடைந்து நல்ல ப்ரயோஜனைப் பெறுவார்கள்

தொழிற்சாலைகளும், பண்ணைகளும் ஸர்க்காரால் ஸ்தாபிக்கப்பட்டு நல்ல நல்ல மாதிரியாய் நடைபெறும். அநேகம் தொழில் கற்றுக்கொள்ள மாதிரிப்பள்ளிக்கூடங்களாகவும் ஏற்படும். கைமுதல் அதிகமில்லாமல் கஷ்டப்படும் ஏழைத் தொழிலாளிகளும் இதில் சேர்ந்து விருத்தி அடைவார்கள்.

மேலும் மேற்கண்ட திருட்டுத்தொழில் செய்தவர்கள் தினந்தோறும் பகலில் ஆஜர்கொடுத்து பூராவேலை செய்துவிடுவதால் இராக்காலங்களில் வேறு யோசனைசெய்ய ஸாத்தியப்படாது.

இன்னொரு முக்கியமான விஷயம் இப்பொழுது குற்றத் தொழில் ஜாதியார் விஷயமாய் செய்யப்போகிற சட்டத்திலேயே இதற்கும் விதிகள் செய்துவிடலாம்.

திருட்டுத்தொழிலை அடக்க மேற்கண்டபடி செய்வது காலதாமதத்தின்பேரில் செய்தாலும் இப்பொழுது மேற்கண்ட குற்றத்தொழில் ஜாதியார் என்று குறிப்பிடப்போகும் நபர் ஜாப்தாவில் அடியிற்கண்டவர்களையும் சேர்த்து கவனித்து வந்தால் ஒருவாறு திருட்டு அடங்கலாம். திருட எண்ணமுள்ள ப்ரதி நபரும், உளவு அறியும்பொருட்டு பகல் காலங்களில் பிச்சைக்காரர்கள் போலவும், யாத்திரைக்காரர்கள் போலவும், வியாபாரிகள் போலவும் வெளியில் பகிரங்கமாய் வந்து உலாவி ஊரினுடையவும், வீட்டினுடையவும் தந்துகளைத் தெரிந்து

கொண்டு இராக்காலங்களில் ஜாக்கிரதையாய் பிறர் கண்ணுக்கு அகப்படாமல் திருட்டுத்தொழில் செய்துவிடுகிறார்கள். அவர்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய முக்கியமான விதிகள்:—

பிச்சைக்காரர்கள் விஷயத்தில், வயோதிகர்கள், அங்கஹீனர்கள், அசக்தர்கள் இவர்களைத்தவிர வேறு யாதொருவரும் பிச்சைக்காரர்களாக வெளியில் திரியவிடாமல் தடுக்க வேண்டியது. பார்வைக்குத் திருடனாய்த் தோன்றும் சக்தியற்ற ஒருவன் பிச்சைக்கு வெளியில் திரியவேண்டியதாய் ஏற்பட்டால் அப்படிப்பட்டவன் தகுந்த டிஸ்டிரிக்ட்டு மெடிகல் ஆபீஸர்களிடம் பிச்சை யெடுத்தாலன்றி பிழைக்கும் வழியில்லாதவன் என்று ஸர்ட்டிபிக்கேட்டு வாங்கிக்கொண்டு அதை எப்பொழுதும் ஆஜர்ப்படுத்தவேண்டும் என்றும், பிரயாணிகள், தெருவில் திரியும் வியாபாரிகள் விஷயத்தில் அவர்கள் புறப்படும் ஊர் கிராம அதிகாரிகள், அந்த ஊருக்கு சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட் இவர்களிடத்தில் அவர்கள் உண்மையான வியாபாரிகள், யாத்திரைவாஸிகள் யோக்கியர்கள் என்றும் ஸர்டிபிகேட்டு பெற்று தெருக்களில் திரிய விடவேண்டும். சாமியார்வேஷம் போட்டுக்கொண்டும், தலைமொட்டையடித்துக் காஷாயம் பூண்டும் வெளிப்படும் திட சரீரமுடையவர்களையும் இப்படிப்பட்ட ஸர்ட்டிபிகேட்டில்லாமல் வெளியில் திரியவிடக்கூடாது.

அப்படி ஸர்ட்டிபிகேட் இல்லாமல் திரியும் பரதேசிகள் யாத்திரைவாஸிகள், பிச்சைக்காரர்கள் இவர்களையும் ஷை குற்றத்தொழில் ஜாதியாரில் சேர்த்து அவர்களையும் அந்தச் சட்டத்துக்கு ஒத்தபடி நடவடிக்கை நடத்தவேண்டியது.

குற்றத்தொழில் ஜாதியார், மேலே காணப்பட்டவர்கள், எல்லாரையும் மேலே குறிப்பிட்ட ஸர்க்கார் தொழிற்சாலை அல்லது பண்ணைகளில் சேர்த்து வேலைவாங்கினால் தேசத்தில்

சோம்பேரிகள் குறையவும், தொழிலும், வியாபாரமும், செல்வமும் விருத்தியாக மார்க்கமும் ஏற்பட்டு, திருட்டுத்தொழிலும் துலைந்து க்ஷேமம் உண்டாகும்.

இதை காங்கிரஸ் ப்ரமுகர்களும், சட்ட ஸபை ஆனரபிள் மெம்பர்களும் கவனித்து ஏற்பாடு செய்து சீக்கிரத்தில் ஸர்க்கார்ப் பண்ணைகளும், தொழிற் சாலைகளும் ஸ்தாபித்து வைப்பார்கள் என்று ரொம்பவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

பிழைக்கும் வழி.

# வர்த்தமானம்.

## ஆந்திர ஸ்திரீகள் கான்பரென்ஸ்

சென்ற மாதம் 28,29, இந்த இரண்டு தினங்களிலும் காக்கிநாடாவில் ஆந்திர ஸ்திரீகளின் கான்பரன்ஸ் ஸ்ரீமதி K. வெங்கடரமணம்மகாருவின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தது. ஸ்ரீமதி K. வெங்கடரமணம்மகாருவின் பிரசங்கம் ஆரம்பித்து அநேக பொது விஷயக்களைப்பற்றிப்பேசினார்கள். அவர்கள் பேசியபேச்சும் யுக்தியும் மிகவும் சிலாகிக்கத்தக்கதாகவிருந்தது. யாவும் தெலுங்கில் நடைபெற்றன. இதுவன்றி முப்பது வியாஸங்கள் ஆந்திரஸ்திரீகளால் படிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இப்பிரசங்கங்கள் யாவும் சாவித்திரி அச்சுக்கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப் படுமென்கிறது. அந்தக் கான்பரென்ஸுக்கு பாபட்லா, தெனாலி, மசுலிப்பட்டணம், ராஜமஹேந்திரபுர், பிட்டாம்பூர் விசாகப்பட்டணம் போன்ற விடங்களிலிருந்து 4000டெலிகேட்டுகளுக்குக் குறையாமல் போயிருந்தார்களாம். பிட்டாம்பூர் ராஜாவும், போலாவரம் ஜமீந்தாரும், வக்கவரம் ஜமீந்தாரும் வேறு சிலரும், கான்பரென்ஸின் செலவுக்கு வேண்டிய பொருளுதவியைச் செய்தார்களெனப்படுகிறது.

ஜப்பான் தேசத்து வர்த்தக விருத்தி.—இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் தம்தேசத்தி லிறக்குமதியாகும் அன்னியதேசச் சரக்குகட்கு 100-க்கு 60-வீதமாகத் துறைமுகவரி விதித்திருக்கின்றார்கள். இவ்வாறு விதித்திருப்பது தமது தேசவியாபாரம் விருத்தியாதற பொருட்டாம்.

வங்காள கோஷாஸ்திரீகளின் படிப்பு.—அந்த மாகாணத்தில் வீடு வீடாயச் சென்று கோஷாஸ்திரீகளுக்குப் பாடஞ்சொல்லி விட்டுவர 30-வாத்திச்சிமார்க ளிருக்கிறார்களென்று கல்கட்டா இந்தியன்டெயிலிநியூஸ்பத்திரிகை கூறுகிறது. கிராமாந்தரங்களில் கூட கோஷாஸ்திரீகளுக்குப் படிப்புச்சொல்லி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமாந்தரங்களில் வாத்திச்சிமார்கள் வீடுவீடாய்ச் சென்று கோஷா ஸ்திரீகளுக்குப் பாடஞ் சொல்லுவதில்லையாம். ஒரு நடுவிடத்தில் கோஷாப் பெண்களை கூட்டமாய்ச் சேர்த்து ஒரு வாத்திச்சி பாடஞ் சொல்லுவதுண்டாம். மகமதிய வாத்திச்சிமார்கள் கூட விருக்கிறார்களாம். பாட்னா நகரத்தில் மட்டும் 12-மகமதிய வாத்திச்சிமார்கள் வீடு வீடாய்ச் சென்று பாடஞ் சொலலுகிறார்களாம். பாதிரிமார்களால் தயார் செய்யப்பட்ட வாத்திச்சிமார்களும் தனியே வேலை செய்து வருகிறார்கள். பரதவான் டிவிஷனில் 2-தகுதி வாத்திச்சி மார்களிருக்கிறார்கள். ஒரிஸ்ஸா நாட்டிலும் ஒரு கூட்டம் வாத்திச்சிமார்கள் தயார்செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் வீடுவீடாயச் சென்று கோஷாஸ்த்ரீகளுக்குப் பாடஞ் சொல்லிவிட்டு வருந்தொழிலில் அமர்ந்திருக்கும் ஸ்திரீகளின் தொகை போன வருஷம் 65-லிருந்து 72-ஆயிற்றென்றும், அவர்கள் கீழ்ப்பாடங் கேட்கும் ஸ்திரீகளின் தொகை 1449-லிருந்து 1650-க்கு உயர்ந்ததென்றும் அந்தப்பத்திரிகை கூறுகிறது.

ஆகாயக் கப்பற் பந்தயம்.—இங்கிலாந்தி லிப்போது புதிதாகப் பிரசுரமாகிவரும் டெய்லி மெயில் என்னும் பத்திரிகை ஒரு ஆகாயக் பந்தயம் நடத்தி 10000-பவுன் பந்தயங் கொடுக்க முன் வந்திருக்கின்றது. இப்பந்தயத்திற்காக யேற்படும் ஆகாயக் கப்பல்கள் பெரிய பிரித்தானிவைச் சுற்றிப் பறக்க வேண்டுமாம. இதற்குக குறித்ததூரம் 1000-மைல். இக்கபபல்கள் சந்திக்க வேண்டிய விடங்களெல்லாம் இப்போதே வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்பந்தயம் ஆகஸ்டுமீ" 22௳ ஆரம்பிக்கப்படும்.